**இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2020**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இறுதி இருப்பின் பெறுமதியானது கிரயம் அல்லது தேறிய கைக்கிட்டும் பெறுமதியில் | 2021 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் நியமத்தின் பிரகாரம் இருப்பின் பெறுமதியை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருப்பானது கிரயம் அல்லது தேறக்கூடிய நிகர பெறுமதியில் குறைவான பெறுமதியில் |

| | | |
|---|---|---|
| குறைவான பெறுமதியில் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்ககளில் வெளிப்படுத்தப்பட வேண்டும், எனினும் இருப்புக்களின் பெறுமதி தேறிய கைக்கிட்டும் பெறுமதியை பொருட்படுத்தாமல் ரூபா 7,316,611 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | | கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 431.78 ஹெக்டெயர் காணிகளின் பெயரளவு பெறுமதியாக ரூபா 4,237,430 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள போதிலும் அக் காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 செப்தெம்பர் 07 இல் காணி மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டை நடாத்துமாறு சபை அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரியுள்ளது. அவர்களும் சந்தித்து இது குறித்து கலந்துரையாடியிருந்த போதிலும் அப் பணியை நிறைவேற்ற முடியவில்லை. காணி மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்யும் தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளர் மூலம் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அவை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | காணிகளின் பெறுமதி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4:7 ஆம் பிரிவு | கல்வி நடவடிக்கைகளுக்காக சம்பளத்துடனான விடுமுறையில் வெளிநாடு சென்று பிணைமுறி நிபந்தனைகளை மீறிய நான்கு உத்தியோகத்தர்களில் 03 முதல் 29 வருட | இவர்களில் மூன்று உத்தியோகத்தர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை அறவீடு தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளிற்கு இணங்க வெளிநாட்டிற்கு சென்று பிணைமுறி நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலப்பகுதியில் சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,509,706 தொகையான மீதி புலமைப்பரிசில் பெற்றவர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | போதிலும், முகவரிகளை கண்டுபிடிக்க முடியாத காரணத்தினால் இந்த வழக்குகள் கைவிடப்பட்டுள்ளன. இதனால், இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. 2007 ஒக்தோபர் 04 இல் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதென தகவல் கிடைத்துள்ளதால், 2021 ஆம் ஆண்டில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | களிடமிருந்து தொகையை ஆறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01/2018 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை | 30 மற்றும் 39 வருடங்களுக்கும் மேலான ரூபா 4,900,000 மதிப்பிடப்பட்ட பெறுமதியிலான 07 வாகனங்கள் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு 01 முதல் 07 வருடங்கள் கடந்துள்ள போதிலும் வாகனங்களை கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் ஏழு பழைய வாகனங்கள் கைதவிர்ப்பு செய்வதற்காக இனங்காணப்பட்டுள்ளன, அந்த வாகனங்களை அகற்றும் பணி 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 1/2018 ஆம் இலக்க திறைசேரி சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு இணங்க தொடங்கப்பட்டது, ஆனால் கொவிட் தொற்றுநோய் காரணமாக கைதவிர்ப்பு செய்தல் தாமதமானது. இருப்பினும் பணிகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு வாகனங்களை கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உடனடியாக கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 10,858,981 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 53,790,676 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 64,649,657 தொகையான முன்னேற்றமொன்று

அவதானிக்கப்பட்டது. அரசாங்க மானியங்கள் அதிகரித்தமை மற்றும் செலவினம் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

### 2.2.1 வருமானம்

- மீளாய்வாண்டின் போது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் உட்பட சபையின் மொத்த வருமானம் ரூபா 662,812,891 தொகையாக காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் ரூபா 666,913,740 மொத்த வருமானத்துடன் ஒப்பிடும் போது 0.61 சதவீதம் குறைவடைந்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்க மானியங்கள் தவிர்ந்த தோட்டங்களின் மொத்த இலாபம் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 28,066,652 அல்லது 42.02 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

- சபைக்குச் சொந்தமான நான்கு தோட்டங்களில், மூன்று தோட்டங்கள் மீளாய்வாண்டின் போது நட்டமடைந்திருந்ததுடன் ஒரு தோட்டம் மாத்திரமே இலாபம் ஈட்டியுள்ளது. முன்னைய ஆண்டில் ரூபா 4,876,303 ஆகவிருந்த குமாரவத்தை தோட்டத்தின் நட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 7,495,284 வரை அதிகரித்துள்ளது, முன்னைய ஆண்டில் டார்ரொன்பீல்ட் தோட்டத்தின் ரூபா 8,811,453 நட்டம் மீளாய்வாண்டில் ரூபா 615,573 வரை குறைவடைந்திருந்தது, முன்னைய ஆண்டில் நரம்பொல தோட்டத்தின் ரூபா 33,678 நட்டம் மீளாய்வாண்டில் ரூபா 1,248,954 வரை அதிகரித்திருந்தது.

### 2.2.2 செலவினம்

மீளாய்வாண்டின் போது சபையின் மொத்தச் செலவு ரூபா 651,953,909 தொகையாக உள்ளதுடன் இது முன்னைய ஆண்டின் ரூபா 720,704,416 மொத்த செலவினத்துடன் ஒப்பிடும் போது 9.5% ஆல் குறைவடைந்துள்ளது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விடயங்கள் | மீளாய்வாண்டின் பெறுமதி | முன்னைய ஆண்டின் பெறுமதி | முன்னைய ஆண்டுடனான வேறுபாடு | முன்னைய ஆண்டுடனான வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 684,634,797 | 658,988,975 | 25,645,822 | 3.89 |
| நடைமுறை சொத்தக்கள் | 186,048,139 | 167,780,816 | 18,267,323 | 10.88 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 61,106,509 | 97,756,040 | (36,649,531) | (37.49) |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 151,253,846 | 143,314,133 | 7,939,713 | 5.54 |
| உரிமை மூலதனம் | 658,322,581 | 585,699,618 | 72,622,963 | 12.39 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொனராகலை குமாரவத்தை தோட்டம் மற்றும் பொல்கஹவெல நரம்பொல தோட்டம் ஆகிய காணிகளில் ரூபா 16,301,964 கிரயத்தில் அலுவலக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த காணிகள் சட்டபூர்வமாக சபையினால் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மொனராகலை குமாரவத்த தோட்டம் மற்றும் பொல்கஹவெல நரம்பொல தோட்டம் ஆகியவற்றை சுவீகரிப்பதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு 2018 சனவரி 01 இல் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல்கள் அமைச்சால் உரிய சுவீகரிப்பு செயன்முறையை மேற்கொள்வதற்காக 2018 நவம்பர் 28 இல் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமில்லாத காணிகளில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அத்தகைய காணிகளை சுவீகரித்தல் தாமதமடையக் கூடாது. |
| (ஆ) | 19 கடன்பட்டோர் மீதியில் 5 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரூபா 5,883,524 மொத்த பெறுமதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இல்லாமல் பதிவழிக்கப்பட்டிருந்தது. இப் பதிவழிப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கடன் தீர்வையக கணக்கில் உள்ளடங்கியுள்ள கடன்பட்டோர்களாக இனங்காணப்பட முடியாத மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | கடன்பட்டோர் அறவீடு செய்யப்படாததற்கான காரணங்கள் பதிவழிப்பதற்கு முன்னர் அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016-2022 காலப்பகுதியில் 07 விசேட செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு சபை திட்டமிட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 199.95 மில்லியனை வழங்கியிருந்தது. அச் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 54.65 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் ரூபா 5.63 மில்லியன் ஒதுக்கப்பட்ட மூன்று செயற்திட்டங்களின் செயலாற்றல் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விசேட செயற்திட்டங்கள் தொடர்பான செயலாற்றல் அறிக்கைகள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | சபையால் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 10 பிரதம ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள், 16 சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள், 10 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள், 02 சிரேஷ்ட ஆலோசகர் பதவிகள், 02 ஆலோசகர் பதவிகள் மற்றும் 03 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள் என ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பான 43 வெற்றிடங்கள் காணபப்பட்டன. இது இன்னும் 2021 ஒக்தோபர் 30 வரை நீடித்தது, இதன் விளைவாக, ஆராய்ச்சியை மேற்கொள்ளும் நிறுவனத்தின் முதன்மை இலக்குக்கு இது தடையாக இருந்தது. | 2021 ஆம் ஆண்டில் இப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன், வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் ஆட்சேர்ப்புக்களை நிறுத்துமாறு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உத்தரவு காரணமாக, உரிய ஆட்சேர்ப்புக்கள் இன்னும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது சேவைத் தேவைப்பாட்டை மறுபரிசீலனை செய்து, அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |